# கோணேசர் கல்வெட்டுக் காட்டும் பண்பாட்டு அம்சங்கள்

முழுப் பெயர்: சந்திரன் துசந்திக்கா

பதிவு இலக்கம்: EU/IS/2016/AC/304

சுட்டெண் : CS 7204

LIBRARY
22 DEC 2023
EUSL, SRI LANKA.

FAC 1176
Project Report
Library - EUSL

இவ்வாய்வுக் கட்டுரையானது வரலாறு இளங்கலைமாணி சிறப்பு கற்கைநெறியின் இறுதி வருடப் பரீட்சையின் ஓர் அலகாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

வரலாற்றுத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2023.

# ஆய்வுச் சுருக்கம்

திருகோணமலைப் பிராந்தியத்தின் மத்திய கால வரலாற்றை அறிந்து கொள்வதில் கோணேசர் கல்வெட்டு தனித்துவம் பெறுகின்றது. இப்பிராந்தியத்தின் கலாசாரம், பண்பாடு, வரலாறு, மரபுகள் கோணேசர் ஆலயத்தை அடியொற்றியே தோற்றம் பெற்றது. கோணேசர் கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டு இப்பிராந்திய வரலாற்றின் பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

இலக்கியச் சான்றான கோணேசர் கல்வெட்டானது ஐதீகங்களுடன் வரலாற்றுத் தகவல்களையும் தன்னகத்தே கொண்டது. இந்நூலில் சொல்லப்படுகின்ற செய்திகள் உண்மைத் தன்மை வாய்ந்தனவா? என்பதனை ஆய்வு வினாவாகக் கொண்டு கிடைக்கின்ற தொல்லியற் சான்றுகளோடு ஒப்பிட்டு, வரலாற்று அணுகுமுறையினூடாக ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக கோணேசர் கல்வெட்டையும், கிடைக்கப்பட்ட சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு குளக்கோட்டனால் கோணேஸ்வர ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்யப்பட்டது முதல் தொழும்பாளர் குடிகளின் வருகை, நியமனம், குடியேற்றம் வரை கூறப்பட்டுள்ளது. இவ்வாய்வினூடாக திருகோணமலைப் பிராந்தியத்தின் பண்பாட்டு அம்சங்கள் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் கோணேசர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குளக்கோட்ட மன்னன் ஆலயத்திற்குச் செய்த திருப்பணிகள், தொழும்பாளர்களான வன்னிபம், இருபாகை முதன்மை, தானத்தார், வரிபத்தார், கருகுலக்கணக்கன், ஆசாரி, புலவன் போன்ற குடிகளின் வருகை, அவர்களின் குடியேற்றம், வன்னியர்களின் அரசாட்சி, நீதி முறை, தொழும்பாளர்களுக்கான கடமைகள், நான்கு பற்றுக்களின் மக்களுக்கான தொழும்புகள், ஆலய பூசை விதிமுறை, வழங்கப்பட்ட தானங்கள், தொழும்பாளர் குடிகளுக்கான சமூகக் கட்டுப்பாடுகள், தொழும்பாளர்களின் தற்போதைய நிலை, தொழும்புகளில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள், மாற்றங்கள், பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றினூடாக திருகோணமலைப் பிராந்தியத்தின் மத்தியகால பண்பாட்டு அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளன. மேலும் கோணேசர் கல்வெட்டு காட்டும் பண்பாட்டு அம்சங்கள் தொடர்பான மேலதிக தேடலுக்கும் இவ்வாய்வு மிக்க பயனுள்ளதாக அமையும்.



திறவுச்சொற்கள்: கோணேசர் கல்வெட்டு, குளக்கோட்டன், தொழும்பாளர்கள், மத்தியகாலம், பண்பாடு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | I |
| நன்றியுரை | | II |
| ஆய்வுச் சுருக்கம் | | III |
| 1. | ஆய்வு அறிமுகம் | 1-6 |
| 2. | கோணேசர் கல்வெட்டும் திருகோணமலைப் பிராந்திய பண்பாட்டு அம்சங்களும் | 7-24 |
| 3. | ஆலயத்தோடு தொடர்பான பண்பாட்டு அம்சங்கள் | 25-68 |
| 4. | பொதுவான பண்பாட்டு அம்சங்கள் | 69-93 |
| 5. | முடிவுரை | 94-101 |
| | உசாத்துணை | 102-105 |
| | பின்னிணைப்பு | V-XVII |